(ஈ) நிலுவையிலுள்ள வினா குறித்து ஏற்கெனவே செய்த அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு; 1985-ஆம் ஆண்டு உறுப்பினரால் கொடுக்கப்பட்ட ஒரு கேள்விக்கு விடை அளிக்கப்படாதது குறித்து மாண்புமிகு திரு தமிழரசன் அவர்கள் 11-4-1987 அன்று அவையில் ஒரு பிரச்சினை எழுப்பினார். அதற்கு மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள், அந்தக் குறிப்பிட்ட கேள்வி சமூக நலத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும் அத்துறைச் செயலாளர், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தக் கேள்வியை அன்று வரை கொண்டு வரவில்லை என்றும் கூறினார். எனவே, நான், அப்படியானால் அந்தத் துறை செயலாளரை** அந்தக் கோப்பை அமைச்சரிடம் உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று உத்தர விட்டேன். 29-4-1987 அன்று அவையில் மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்து மேற்குறிப்பிட்ட வினா சமூகநலத் துறைக்கு கிடைத்த மறு நாளே வணிக வரி மற்றும் அறநிலையத் துறைக்கு மாற்றப்பட்டு விட்டது என்றும், பேரவைச் செயலகத்திற்கு உடனே தெரிவிக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார். இந்த வினாவுக்கு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் 22.4.1987 அன்று விடை அளித்து உள்ளார் இதிலிருந்து பார்க்கும்போது இந்த வினா சமூகநலத் துறையில் நிலுவையில் இல்லை என்பது தெளிவாகிறது. சமூக நலத் துறை செயலாளர் இதில் தாமதம் ஏதுவும் செய்யவில்லை என்றும் புலப்படுகிறது. எனவே 11.4.1987 அன்று நான் சமூக நலத் துறை செயலாளரை** என்று சொல்லியதை பேரவைக் குறிப்பி லிருந்து நீக்கி விடுகிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அறிவுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(உ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1987, (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு: ''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.